பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் (எஸ்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

<u>கடித எண்.42629/எஸ்/2010– 1, நாள் 16.09.2010</u>

அனுப்புநர்
திரு. கே. என். வெங்கட்ரமணன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை –9.
அனைத்து துறைத் தலைவர்கள்.

அய்யா,

பொருள்: பொதுப்பணிகள் – காலிப் பணியிடங்கள் - முன்கூட்டியே மதிப்பீடு செய்து நிரப்ப உரிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து - அறிவுரைகள் - வலியுறுத்தப்படுகின்றன.

பார்வை:1. அரசாணை (நிலை) எண்.603, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி.எம்) துறை, நாள் 12.6.1985.
2. அரசாணை (நிலை) எண்.368, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி.எஸ்) துறை, நாள் 18.10.1993.
3. அரசாணை (நிலை) எண்.97, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி.எம்) துறை, நாள் 21.4.1994.
4. அரசாணை (நிலை) எண்.123, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி.எஸ்) துறை, நாள் 10.9.2009.

*****

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரல்களின்படி காலிப்பணியிடங்களை மதிப்பிடுவதற்கான நடவடிக்கைகளை முன்கூட்டியே தொடங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட அரசாணைக்கு சில திருத்தங்கள் செய்து பார்வை மூன்றில் காணும் அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பார்வை இரண்டு மற்றும் நான்கில் காணும் அரசாணைகளில் காலிப்பணியிட மதிப்பீடு தயாரித்தல் மற்றும் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயாரித்தல் குறித்து விரிவான அறிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

த.பி.பா.

3. மேற்குறிப்பிடப்பட்ட அரசாணைகள் அனைத்திலும் காலிப் பணியிடங்களை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்கூட்டியே தொடங்கப்படவேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

4. 27.8.2010 மற்றும் 28.8.2010 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் "காலிப்பணியிடங்களை முன்கூட்டியே மதிப்பீடு செய்து, நிரப்புவதற்கான முயற்சிகளை உரிய காலத்தில் மேற்கொள்ளவேண்டும்" என முடிவெடுக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்துத் துறைகளிலுமுள்ள ஒவ்வொரு பதவிக்குமான நியமன அதிகாரிகள், பார்வையில் கண்ட அரசாணைகளில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளைத் தவறாது பின்பற்றி, காலிப்பணியிடங்களுக்கான மதிப்பீடுகளை உரிய காலத்தில் முன்கூட்டியே முடிவு செய்து அவற்றை நிரப்பிட உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

5. இக்கடிதம் பெற்றமைக்கான ஒப்புதல் கடிதம் உடனடியாக அரசிற்கு அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

நா. விநாயகமூர்த்தி
17/09/2010

அரசு செயலாளருக்காக.

17.9.10

<u>நகல்</u>

பொது (பொது I) துறை, சென்னை 9
ப.ம.நி.சீ. (நி.சீ)த்துறை, சென்னை 9
இத்துறையின் அனைத்து அலுவலர்கள் (ம) பிரிவுகள்
இ.கோ./ உதிரி நகல்கள்.